

அமைச்சர்கள் கே.என்.நேரு முனைவர் கோவி.செழியன் ஆகியோர் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பெரியமிளகு பாறை பகுதியில் நடைபெற்ற விழா நிகழ்வில் திருச்சிராப்பள்ளி மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நீண்ட காலமாக வசித்து வரும் குடியிருப்பு வாசிகளுக்கு பட்டாக்களை வழங்கினார்கள். இந்நிகழ்வில், மேயர் மு.அன்பழகன், மாவட்ட செயலாளர் வைரமணி, முத்துச்செல்வம், காஜாமலை விஜய், கமால் முஸ்தபா, நாகராஜ், மோகன்தாஸ், மற்றும் அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# சமூக விஷத்தின் அடையாளம்; ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.!

## ராகுல் காந்தி கடும் விமர்சனம்!

ஹரியானா, அக்.12-

சமூக விஷத்தின் அடையாளம் ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.க. என, நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார்.



ஹரியானா மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி புரன்குமார், துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம், ஒட்டுமொத்த காவல்துறை வட்டாரத்தையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

ஐ.பி.எஸ். அதிகாரியின் தற்கொலை மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளதாக நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்த துயரமான சம்பவம், சாதிய பாகுபாட்டில் சமூகம் மோசமான நிலையில் இருப்பதை எதிரொலிப்பதாக வேதனை தெரிவித்துள்ளார். ஐ.பி.எஸ். அதிகாரியின் தற்கொலை, சாதிய அடிப்படையில் மனிதாபிமானம் நசுக்கப்பட்டு, ஆழமடைந்து வரும் சமூகத்தின் விஷத்தின் அடையாளம் என ராகுல்காந்தி விமர்சித்துள்ளார்.

மேலும், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மீதான தாக்குதல் குறித்தும் குறிப்பிட்டுள்ள அவர், இது போன்ற சம்பவங்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான அடக்குமுறை அதிகரித்து வருவதையே காட்டுவதாகவும், பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ் வெறுப்புணர்ச்சியை விதைத்து, மனுதர்மத்தை விஷத் தன்மையுடன் சமூகத்தில் பரப்பி வருவதாகவும் காட்டமாக விமர்சித்துள்ளார்.

## மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவாக்கம்!

# மலைப்பகுதியில் செயல்படுத்தப்படும் 'கட்டணமில்லா விடியல் பயணம்!'

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

சென்னை, அக்.12-

மலைப்பகுதியில் செயல்படுத்தப்படும் கட்டணமில்லா விடியல் பயணத் திட்டம் இனி மாற்றுத் திறனாளிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்தது. இதன்மூலம் மாற்றுத்திறனாளிகள், அவருடன் வரும் ஒரு துணையாளர் மலைப்பகுதிகளில் இயக்கப்படும் சாதாரண கட்டண பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், கடந்த சுதந்திர தின விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையில் அறிவிக்கப்பட்ட இந்த திட்டத்தை செயல்படுத்தும் வகையில் தமிழ்நாடு அரசு நேற்று அரசாணை வெளியிட்டுள்ளது.

இதனால் மாற்றுத் திறனாளிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

# தமிழகத்தில் உள்ள 3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு விருது!

## அமைச்சர் ஆர்.இராஜேந்திரனிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, அக்.12-

தமிழகத்தில் உள்ள 3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 19.09.2025 அன்று ஆந்திர மாநிலம், திருப்பதியில் நடைபெற்ற தென்னிந்திய கரும்பு மற்றும் சர்க்கரை தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்க கருத்தரங்கில் வழங்கப்பட்ட விருதினை சுற்றுலா மற்றும் சர்க்கரைத்துறை அமைச்சர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்ற நிகழ்வு தொடர்பான குறிப்பு.

கரும்பு விவசாயிகளின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத் துறை, 22 தனியார் என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன.

கரும்பு விவசாயிகளின் மீது அக்கறை கொண்ட இவ்வரசு கரும்பு சாகுபடி பரப்பை அதிகரிப்பதற்காகவும், சர்க்கரை ஆலைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கும் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கைகளின் காரணமாக சர்க்கரை ஆலைகள் நலிவடைந்த நிலையிலிருந்து மீண்டு வருகின்றன.

தென்னிந்திய கரும்பு மற்றும் சர்க்கரை தொழில் நுட்ப வல்லுநர்கள் சங்கம் ஒவ்வொரு ஆண்டும், தென்னிந்திய அளவில் சிறப்பாக செயல்படும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை தேர்வு செய்து, விருதுகள் வழங்கி சிறப்பித்து வருகிறது. அவ்வாறு 2024-25 அரவைப் பருவத்தில், தமிழ்நாட்டில் இயங்கி வரும் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் தென்னிந்திய அளவில் விருதுகள் பெற்று சாதனை படைத்துள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

**சர்க்கரை ஆலை - விருது விவரம் - பரிசு விவரம்**

கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலை, கச்சிராயப்பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - தொழில்நுட்ப செயல்பாடு - முதல் பரிசு (பிளாட்டினம் விருது)

கள்ளக்குறிச்சி-1 கூட்டுறவு சர்க்கரை ஆலை, கச்சிராயப்பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம் - கரும்பு அபிவிருத்தி - இரண்டாம் பரிசு (தங்க விருது)

கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலை, கச்சிராயப்பாளையம், கள்ளக்குறிச்சி மாவட்டம்- கரும்பு அபிவிருத்தி - மூன்றாம் பரிசு (வெள்ளி விருது)

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை, திருவள்ளூர் மாவட்டம் - தொழில்நுட்ப செயல்பாடு - மூன்றாம் பரிசு (வெள்ளி விருது)

19.09.2025 அன்று அன்று ஆந்திர மாநிலம், திருப்பதியில் நடைபெற்ற தென்னிந்திய கரும்பு மற்றும் சர்க்கரை தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்க கருத்தரங்கில் மூன்று கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கான விருது மற்றும் சான்றுகள் வழங்கப் பட்டது. விருதுகள் பெற்ற சர்க்கரை ஆலைகளின் செயலாட்சியர்கள் விருது மற்றும் சான்றுகளை சுற்றுலா மற்றும் சர்க்கரைத் துறை அமைச்சர் அவர்களிடம் 08.10.2025 அன்று காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்நிகழ்வில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், வி. தட்சிணாமூர்த்தி, மற்றும் சர்க்கரைத் துறை இயக்குநர், டி. அன்பழகன் ஆகியோர் உடனிருந்தனர்.




சேலம் மாவட்டத்திற்குட்பட்ட மேட்டூர், சேலம் தெற்கு, சேலம் வடக்கு ஆகிய சட்டமன்றத் தொகுதி பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பொறுப்புக்குழு உறுப்பினர்களுக்கு, வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளர், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனை வழங்கினார். உடன் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் பார்.இளங்கோவன், ரியா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் இருந்தனர்.

## நாகை மாவட்டத்தில்

# நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் குறுவை நெல் கொள்முதல்!

## அமைச்சர் அர.சக்கரபாணி ஆய்வு! மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் பங்கேற்பு!

நாகை அக்.12--

நாகை மாவட்டத்தில் திருப்பூண்டி, சியாத்த மங்கை அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆய்வு.

நாகை மாவட்டம் கீழையூர் ஒன்றியம் திருப்பூண்டி மற்றும் திருமருகல் ஒன்றியம் சீயாத்தமங்கை ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் மூட்டைகளை கொள்முதல் செய்வது, கொள்முதல செய்யப்படுகின்ற நெல்லின் ஈரப்பதம், தரம், நெல் மூட்டைகளின் எடை போன்றவைகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆய்வு மேற்கொண்டு, விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் மூட்டைகளை கொள்முதல் செய்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்கு மற்றும் ஆலைகளுக்கும் தாமதமின்றிஎடுத்துச் செல்லவும், விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்து அவர்களது குறைகளை நிறைவேற்ற உரிய அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

அதைத் தொடர்ந்து நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நெல் கொள்முதல் செய்வது குறித்த ஆய்வுக் கூட்டம் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. நேரடி நெல் கொள்ளுதல் நிலைய ஆய்வு மற்றும் ஆய்வுக் கூட்டத்தில் அரசு முதன்மை செயலாளர் சத்யபிரதா சாஹூ, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குநர் ஆ.அண்ணா துரை, நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை செல்வராஜ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் தாகை மாலி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆ. தாமஸ் ஆல்வா எடிசன், செல்வ. செங்குட்டுவன், ஒன்றிய குழு முன்னாள் தலைவர் மு.ப. ஞானசேகரன், மாவட்ட அயலக அணி துணைத்தலைவர் விஜயகணபதி, மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் முகமது ரபிக்,மாவட்ட பிரதிநிதி ஜெயக்குமார் /கீழையூர் கிழக்கு ஒன்றிய வர்த்தக அணி அமைப்பாளர் மு ப செல்வம் மற்றும் ரஹமத், சியாத்தமங்கை கிளை செயலாளர் சுவாமிநாதன். மற்றும் அரசு துறை அலுவலர்கள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பின்னர் நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்திற்கு பின் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார். அதனடிப்படையில் டெல்டா மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற நெல்லை உடனடியாக கொள்முதல் செய்ய ஏதுவாக நாகை மாவட்டத்தில் 2025-2026ம் ஆண்டு குறுவை பருவத்தில் தற்போது தமிழ்நாடு துகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக 117 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப் பட்டு, இதுவரை 41.062 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு இதுவரையில் 26.713 மெடன் நெல் சேமிப்பு கிடங்குகளுக்கு இயக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதில் 6,307 விசாயிகளுக்கு ரூ.87.74 கோடி தொகை வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு குறுவை பருவத்திற்கு 23 நேரடி நெய் கொள்முதல் நிலையங்கள் மட்டுமே திறக்கப்பட்டு, 5,440 மெடன் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆண்டு இந்தான் வரையில் 117 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு நெல் கொள்முதல் பணி நடைபெற்று வருகிறது.

மேலும் நாகை மாவட்டத்தில் கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 3478 மெ.டன் அளவிற்கு மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட்டது. 09,10:2025 ஒரே நாளில் 3,129 மெட்டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 13 மடங்கு அளவிற்கு கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்பட்டு கொள்முதல் நடைபெற்று வருகிறது இவ்வாறு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

## தமிழ்நாடு மின்கழகத் தொ.மு.ச. நிர்வாகிகள் தேர்தல்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண். 38/சிபிடி, பேரவை இணைப்பு எண்.26 )திட்ட நிர்வாகிகள் தேர்தல், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் படி வருகிற 25.10.2025 அன்று கழகத்தின் தணிக்கைக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் திரு. அ.சரவணன் அவர்களை மேலிடப் பார்வையாளராகக் கொண்டும் கீழ்க்கண்ட தேர்தல் ஆணையாளர்களைக் கொண்டும் நடைபெறும்.

| தேர்தல் நடத்தப்படும் திட்டங்கள் | தேர்தல் ஆணையாளர்கள் |
|---|---|
| வடசென்னை திட்டம் | திரு. **ஜெ.விஜயகுமார்** பேரவைஇணைப்பொதுச் செயலாளர் **தேர்தல் ஆணையாளர்** கைபேசி எண். 9444883555<br>திரு. **என்.தனசேகரன்** பேரவைச் செயலாளர், **துணை ஆணையாளர்** கைபேசி எண். 9444145005 |
| விழுப்புரம் திட்டம் | திரு. **ஜோசப் நெல்சன்** திருச்சி மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் கைபேசி – 6382716377 |

தேர்தல் அட்டவணை, தேர்தல் விதிமுறைகள் ஆகியவை தேர்தல் ஆணையாளர்களால் தனியாக வெளியிடப்படும்.

கலைஞரகம்
சென்னை – 17
நாள்: 10.10.2025

**மு.சண்முகம்**,Ex.MP
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், எல்லகடை பொன்தாமரை மஹாலில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு திட்ட முகாமில் கோரிக்கை மனு அளித்த மனுதாரரின் மனுவின் மீது உடனடி நிர்வாக உரிய ஆணையை வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயதீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், மொடக்குறிச்சி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் சு.குணசேகரன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.




தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கல்லூரி மாணவியருக்கு பட்டங்களை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வின் போது ச.முரசொலி எம்.பி, துணை மேயர் மரு.அஞ்சுகம்பூபதி, முன்னாள் எம்.எல்.ஏக்கள் எம்.இராமச்சந்திரன், கே.டி.மகேஷ் கிருஷ்ணசாமி, கல்லூரி கல்வி இயக்க இயக்குனர் முனைவர்.குணசேகரன், கல்லூரி முதல்வர் முனைவர் கோ.வாசுகி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.